


# “தமிழையும் தமிழர்களையும் கோயிலுக்குள் அழைத்துச் சென்றது திராவிடம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் மூன்றாம் அமர்வில் ‘ஆலயம் என்ன அவர்கள் சொத்தா?’ என்னும் தலைப்பில், திராவிடர் கழகத் துணைப்பொதுச்செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி அவர்கள் ஆற்றிய உரை :**



வழக்கறிஞர்
**சே.மெ.மதிவதனி**
துணைப்பொதுச்செயலாளர்,
திராவிடர் கழகம்

“இன்னும் சில மாதங்களில் தமிழ்நாட்டிற்குத் தேர்தல் வந்துவிடும். அரசியல் கட்சிகள் தேர்தலை நோக்கி மிக வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலில் வெற்றி அடைய வேண்டும் என்ற நோக்கில், தேர்தல் அரசியலில் நிற்கக் கூடிய கட்சிகள் செயல்படுவது இயல்பு. ஆனால், ஒரு கட்சியினுடைய இளைஞர் அணியின் செயலாளர் தமிழ்நாட்டின் மாண்புமிகு துணை முதலமைச்சர் எந்த வழியில் நிற்கிறார் என்று சொன்னால், ‘ஆட்சி வரும் போகும். அய்யா, அண்ணா வகுத்த கொள்கைகள் போகாது வாழும்’ என்று சொல்லக்கூடிய வகையிலே முத்தமிழறிஞர் கலைஞருடைய பேரனாக, தந்தை பெரியாரின் கொள்கைப் பேரனாக, அறிவுத் திருவிழாவை நடத்திக் கொண்டிருக்கிறார்.



அழைப்பிதழைப் பார்த்த உடனே எனக்கு தோன்றியது. மிக சிறப்பாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துவிட்டு, என் தலைப்பில் மட்டும் கொஞ்சம் எழுத்துப்பிழை விட்டுவிட்டார்களோ என்று. ‘ஆலயம் என்ன அவர்கள் சொத்தா?’ - அந்த ‘ர்’க்கு மேல் புள்ளியைத் தெரியாமல் வைத்துவிட்டார்களோ என்று எனக்கு தோன்றியது.

நம்முடைய திராவிட இயக்கம் ‘ஆலயம் என்ன உன் வீட்டு சொத்தா?’ என்று மட்டும் கேட்கவில்லை. ‘படிப்பு என்ன உன் வீட்டு சொத்தா, அரசு வேலை என்ன உன் வீட்டு சொத்தா, உயர் நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் உன் தாத்தன் வீட்டு சொத்தா, சட்டமன்றமும் நாடாளுமன்றமும் உங்கள் சொத்தா’ என்று கேட்ட இயக்கம்.

## பெரியாரும் குன்றக்குடி அடிகளாரும்

‘கடவுள் இல்லவே இல்லை’ என்று சொன்ன தந்தை பெரியார் ஏன் ஆலய உரிமை பற்றி பேச வேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள். சாமி கும்பிட போக வேண்டுமா வேண்டாமா என்பது, என்னுடைய தேர்வு. ஆனால், கோயிலுக்குள் எல்லோரும் போக வேண்டும் என்பது அடிப்படை உரிமை. சுயமரியாதை. தன்மான உணர்ச்சி.

நான் எடுத்து வந்திருக்கக்கூடிய இந்தப் புத்தகத்தின் பெயர், ‘தவத்திரு குன்றக்குடி அடிகளாருடைய அறிவுப் பெட்டகம்’. தொகுப்பாசிரியர் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்கள்.

இந்த நூலின் பக்கம் 67-இல் திராவிடர் கழகத்தினுடைய துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்கள் எடுத்த பேட்டியில் ‘பெரியாரின் கொள்கையை எந்த அடிப்படையில் நீங்கள் அணுகுகிறீர்கள்?’ என்று கேட்கிறார். அதற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் சொல்கிறார், ‘கடவுள் நம்பிக்கை அடிப்படையில் முரண்பாடுகள் இருந்தால்கூட மனிதனைப் போற்றுகிற அடிப்படையில் முரண்பாடு எதுவும் இல்லை. அதுதான் முக்கியம் என்று நான் நினைக்கிறேன்’ என்று.

தமிழ்நாட்டில் ஆலய உரிமையைப் பேசியது மட்டுமல்ல, ‘சட்டம் இயற்றாவிட்டால் கருவறைக்குள் நுழைந்து போராடுவோம்’ என்று அறிவித்தவர் தலைவர் அறிவுலகப் பேராசான் தந்தை பெரியார் அவர்கள்.

## கட்டியவர்களுக்கு கருவறையில் இடமில்லை

கோயில் பொதுச்சொத்து. கோயிலைக் கட்டியவர்கள் பொதுமக்கள். கோயிலுக்கு கல் சுமந்தது, மண் சுமந்தது, சித்தாள் வேலை பார்த்தது, கொத்தனார் வேலை பார்த்தது எல்லாம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடி மக்கள். ஆனால், கோயில் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டவர்கள் பார்ப்பனர்கள்.

சட்டம் இயற்றினார்கள். கோயிலுக்குள் போய் விட்டோம். உள்ளே போய் ஏதாவது புரிகிறதா



என்று பார்த்தால், ஹிந்தி படத்தை சப்டைட்டில் இல்லாமல் பார்த்தது மாதிரி இருந்தது. எல்லாம் சம்ஸ்கிருதம். ‘தாய்மொழி தமிழ்தான் கோயிலுக்குள் இருக்க வேண்டும்’ என்று தந்தை பெரியார் சொன்னார்.

கலைஞர் ஒரு பொது மேடையில் ‘எங்கள் ஐயா பெரியார் ‘கடவுள் இல்லை’ என்று சொல்லிவிட்டார். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், கும்பிடுவதுதான் கும்பிடுகிறாய், தமிழில் கும்பிடு என்றுதான் சொல்கிறோம். வணங்குவதுதான் வணங்குகிறாய், தமிழில் வணங்கு என்றுதான் சொல்கிறோம். என் மொழி, தமிழ் தெரியாத கடவுளுக்கு தமிழ்நாட்டில் என்ன வேலை?’ என்று கேட்டவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். தமிழை கோயிலுக்குள் அழைத்துச் சென்றதும் திராவிட இயக்கம்தான்; தமிழர்களைக் கோயிலுக்குள் அழைத்துச்சென்றதும் திராவிட இயக்கம்தான்.

நீங்கள் ஐ.ஏ.எஸ். ஆவது எளிது; ஐ.பி.எஸ். ஆவது எளிது; நீதிபதி ஆவது எளிது; மாவட்ட ஆட்சியர் ஆவது கூட எளிதானதுதான். ஐ.பி.எஸ். ஆவது மிக எளிது. ஐ.பி.எஸ். வேலையை விட்டுவிட்டு ஆடு மேய்க்க வருவது அதைவிட எளிது. ஆனால், இவையெல்லாவற்றையும்விட அர்ச்சகர் ஆவதுதான் கடினம்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன, பழங்குடியின மக்கள், ஆண்டாண்டு காலமாகத் தெருவில்கூட நடக்க முடியாதவர்கள், இன்றைக்குக் கோயில் அர்ச்சகர்களாகக் கருவறைக்குள் நிற்கிறார்கள்.. இந்த வெற்றியை ஈட்டித் தந்தவர்கள் யார்? யாரால் இது நடந்தது?

‘இந்துக்களே ஒன்று கூடுங்கள்’ என்று அழைத்தவர்களால் நடந்ததா? ‘இந்துக்களுக்காக ஆட்சி செய்கின்றோம்’ என்று சொல்லக்கூடிய பா.ஜ.க.-வால் நடந்ததா? கலவரத்தைத் தூண்டக்கூடிய சங் பரிவார்களுடைய ஆர்ப்பாட்டத்தால் நடந்ததா?

இல்லை. கடவுளே இல்லை என்று சொன்ன பெரியாராலும், அவர் வழிவந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞராலும்தான் நடந்தது என்று பெருமையோடு சொல்கிறோம்! எல்லோருக்கும் ஆகஸ்டு 15 சுதந்திர தினம். ஆனால், அதற்கு ஒரு நாள் முன்பு, ஆகஸ்டு 14, 2021-இல், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற பணி நியமன ஆணையைத் தந்தவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற முதலமைச்சர்.

## திராவிட மாடல் சாதனை

இது திராவிடர் கழகத்தவர்களுக்கு எவ்வளவு நெகிழ்ச்சி என்றால், அந்தப் பணி நியமன ஆணையைக் கொடுத்துவிட்டு, பெரியார் திடலுக்குச் சென்று ஆசிரியர் அய்யா வீரமணி அவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார். அமைச்சர் பெருமக்கள் கூடியிருக்க, ஆசிரியர் அவர்கள் கையைப் பிடித்துக்கொண்டு, முதல்வரிடத்தில் நெகிழ்ச்சியாகப் பேசியதைப் பார்த்தோம்.

‘ஆலயம் என்ன அவர்கள் சொத்தா’ என்று கேட்கிறோமில்லையா, அந்த ‘அவர்களுக்கு’ மிகவும் பிடித்த கோயிலான கபாலீசுவரர் கோயிலுக்குக் கீழ் வரக்கூடிய மண்டபத்தில் வைத்து, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் நியமன ஆணையை வழங்கினார் முதலமைச்சர். அதுமட்டுமல்ல, ஓதுவார் நியமனத்தில் ஒரு பெண்!

‘அறங்காவலர்கள் குழுவில் பெண்களும் பட்டியல் இனத்தவரும் நிச்சயம் இடம்பெற வேண்டும்’ என்று அரசாணை கொண்டுவந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். பெண்களை ஓதுவார்கள் ஆக்கியது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

கோயில் கருவறைக்குள் இந்து சகோதரர்களை அழைத்துச் சென்றது, திராவிட முன்னேற்றக் கழகம். கோயிலுக்குள் பெண் ஓதுவாரை அழைத்துச் சென்றது திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்துக்களே ஒன்று கூடி, ‘2026-இல் ஆலயம் மட்டுமல்ல, எதுவும் உங்க அப்பன் வீட்டுச் சொத்து கிடையாது; தமிழர்களின், திராவிடத்தின் சொத்து!’ என்பதை நிரூபிக்க, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்க வாக்களியுங்கள்”.

## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

‘டீக்கடை’ என்னும் பதிவரின் பக்கத்தில் இருந்து...

‘கிரேக்கத்தில் உருவான அறிவுத் தலை முறைக்கு இணையான பாரம்பரியம் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம். எப்படி அங்கே சாக்ரடீஸ், அவரின் மாணவர் பிளாட்டோ, பிளாட்டோவின் மாணவர் அரிஸ்டாட்டில் என ஒரு அறிவுச் சங்கிலி உருவானதோ, அதுபோல இங்கே பெரியார், அண்ணா, கலைஞர் என்கிற அறிவுச் சங்கிலி. அதற்கடுத்தும் ஏதென்ஸ் நகரத்தில் இளைஞர்களுக்கான பயிற்சிப் பட்டறை வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. ஏனென்றால், அந்த அறிவுக் கடத்தல் நின்று விடக்கூடாது என்பதற்காக.

முன் காலத்தில் முழுவதும் ரயிலில் கரி இஞ்சின்கள். ரயில் தான் வேகமாகப் போகிறதே என்று இஞ்ஜினில் கரி அள்ளிப் போடாமல் விட்டு விட்டால் நின்று விடும். அது போன்ற தவற்றைச் செய்யக்கூடாது என்பதற்காகவே தி.மு.க. இளைஞர் அணி தொடர்ந்து அறிவுக் கடத்தலை ஏதாவது ஒரு வகையில் செய்து வருகிறது.

அதில் அறிவுத் திருவிழாவும் ஒன்று. இதுவரை தி.மு.க., அரசியல் இயக்கமாக சமூகத்தில் கொண்டு வந்த மாற்றங்கள், அந்த மாற்றங்கள் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள். இது பற்றி ஏராளமான அமர்வுகள் நடைபெற்றன. முக்கியமாக எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், கல்வி கொடுக்கப்படுவதின் அவசியம், சமூக நீதி கருத்துக்கள் எல்லோரையும் சென்று சேர்வதன் அவசியம், அவற்றை சேர்ப்பிப்பதற்கான வழிமுறைகள் என்ன, ஆரிய மற்றும் இந்தித் திணிப்பினால் வரும் பிரச்சினைகள் அதை எதிர்கொள்வது எப்படி? என்பது பற்றியான தலைப்புகளில் தொடர்ந்து கருத்துகள் இளைய தலைமுறையிடம் கடத்தப்பட்டன.

இவர்கள் அடுத்த கட்டமாக தாங்கள் அறிந்து உணர்ந்த கருத்துகளை அடுத்த கட்ட இளைஞர்களிடம் தொடர்ச்சியாக சோர்வின்றி பரப்பிக் கொண்டே இருக்க வேண்டும். யாருக்குத் தேவையோ அவர்களிடம் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அதுதான் இப்போதைய காலத்தின் கட்டாயம். அதை உணர்ந்துதான் இந்த அறிவுத் திருவிழா இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் நடத்தப்பட்டுள்ளது. விதைக்கப் பட்டுள்ள இந்த விதைகளின் பலன்களை அடுத்த தலைமுறை நிச்சயமாக அறுவடை செய்யும்’.